பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 09 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அமெரிக்க பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி ஐ நா பொதுசபைக் கூட்டத்தில் பங்கேற்க வந்துள்ள குவைத், நேபாள நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.
2. பிரதமரின் ஆயூஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் 57 கோடி மக்கள் பயன்பெற்றுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.
3. மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
4. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.
5. இலங்கையின் ஒன்பதாவது அதிபராக திரு அநுரா குமார திசநாயகே இன்று பதவியேற்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

அமெரிக்காவுக்கு மூன்று நாள் பயணமாக சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி குவைத் மற்றும் நேபாள நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

ஐ நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயார்க்க வந்திருந்த குவைத் நாட்டின் பட்டத்து இளவரசர் திரு ஷேக் சபா அல் ஹாலிக்-யை சந்தித்து பேசிய பிரதமர், இந்தியா – குவைத் இடையேயான வரலாற்று சிறப்புமிக்க உறவுகளையும், இரு நாட்டு மக்களுக்கும் இடையேயான தொடர்புகளை வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடத்தினார்.,

நேபாள பிரதமர் திரு சர்மா ஒலி-யை சந்தித்து பேசிய திரு நரேந்திரமோடி, இருதரப்பும் பயன்பதரத்தக்க விஷயங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறிதது பேச்சு நடத்தினர்

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை மேம்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

முன்னதாக பல்வேறு நிறுவனங்களின் தலைமை செயலர் அதிகாரிகள் பங்கேற்ற வட்டமேசை கூட்டத்தில் திரு நரேந்திரமோடி கலந்து கொண்டார்.

ஹால்டெக் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் கிருஷ்ணா சிங்கை சந்தித்து பேசிய பிரதமர், இந்தியாவில் தொழில் தொடங்குவது குறிதது ஆலோசனை நடத்தினார்.,

இதற்கான செயல்திட்டம் குறித்தும் அவருடன் பிரதமர் பேச்சு நடத்தினார்,

அணுசக்தி தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பது குறித்தும் இரு தலைவர்களும் பேச்சுக்கள் நடத்தினர்.

இந்தக் கூட்டத்தில் அடோப் நிறுவனத்தின் தலைவர் சாந்தனு நாராயண், கூகுள் நிறுவன முதன்மைச் செயல் அதிகாரி திரு. சுந்தர்பிச்சை, ஐ பி எம் நிறுவனத்தின் திரு அரவிந்த் கிருஷ்ணா, ஆக்சஞ்சர் நிறுவனத்தின் திருமதி ஜூலி ஸ்வீட் உள்ளிட்டோரையும் திரு நரேந்திரமோடி சந்தித்து பேசினார்.

ஐ நா சபையின் பொதுக்கூட்டத்தில் திரு நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

[]<<<>>>[]

பிரமரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் ஆயூஷ்மான் பாரத் தொடங்கப்பட்டு இன்று ஆறு ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

2018-ஆம் ஆண்டு ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள ராஞ்சியில் பிரதமர் திரு நரேந்திரதமோடி இதே நாளில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்.

பிரதமரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ஓராண்டுக்கு ஐந்து லட்சம் ரூபாய் வரை ஒவ்வொரு குடும்பமும் மருத்துவ காப்பீடு பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

12 கோடியே 37 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 55 கோடி மக்கள் இத்திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர்.

ஆயூஷ்மான் திட்டத்தின் ஆறு ஆண்டுகள் நிறைவையொட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா விடுத்துள்ள சமூக வலைதளச் செய்தியில், ஏழை எளிய மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்க பிரதமர் கொண்டு வந்த இத்திட்டத்தின் மூலம் கோடிக்கணக்கான மக்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை கிடைத்திருப்பது மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் உடல் நலனை பாதுகாப்பதற்காக இத்தீட்டம் கொண்டுவரப்பட்டு அதன் இலக்குகளை எட்டி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அனைவருக்கும் சமமான மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற மத்திய அரசின் உறுதியான கொள்கை இத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் திரு ஜெ பி நட்டா குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஐந்து லட்சம் மரக்கன்றுகளை ஒரு மணி நேரத்தில் நட்டு உலக சாதனை படைத்த ராணுவத்தின் 128-வது தரைப்படையினர் மற்றும் பிராந்திய ராணுவத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்புப்படையினருக்கும் மததிய அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதியில் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் நடத்தப்பட்ட சிறப்பு மரம் நடும் இயக்கத்தில் ராணுவப்படையினர் இந்த சாதனையை படைத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் என்ற பிரதமரின் இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும், குறிப்பாக கிராமப்பகுதிகளில் மரம் நடும் இயக்கத்தை வலுப்பெறச் செய்ய வேண்டுமென்றும் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

இந்த யூனியன் பிரதேசத்தில் ரஜோரி, ரியாஸி, பூஞ்ச், படுஹாம், ஸ்ரீநகர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள 26 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நாளை மறுநாள் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

ஜம்மு-கஷ்மீரில் மூன்று கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது.

மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் உள்ள மீனவர்கள் நலனுக்காக மத்திய அரசு 17 கோடி ரூபாய் வழங்கி இருப்பதாகக் கூறினார்,

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) -47-- செகண்ட்*

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மாநில அரசு அரசியல் கொலையில் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடிக்க உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இளைஞர்கள் மற்றும் மக்களை அதிகம் பாதிக்கும் டாஸ்மாக் கடைகளை மூடுவதற்கான எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் திரு எல் முருகன் குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில், மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரைச் சேர்ந்த இந்த 37 மீனவர்களும், இரண்டு படகுகளில் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் கைது செய்யப்படும் மீனவர்களுக்கு அதிக அளவில் அபராதம் விதிக்கப்படுவதை தடுக்க தேவையான சட்ட உதவிகளை தூதரகம் மூலம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்றபின் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் குறித்து மாநில அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலளர் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளிநாட்டு முதலீடுகளின் தற்போதைய நிலை, தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் வெளியிட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஆயத்த நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தலைமையிலான குழுவினர் இன்று இரண்டு நாள் பயணமாக ராஞ்சி சென்றுள்ளனர்.

தேர்தல் ஆணையர்கள் திரு ஞானேஷ்குமார், திரு சுக்பீர்சிங் சாந்து ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

**[]<<<>>>[]**

இலங்கை அதிபர் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு அநுரா குமார திசநாயகே அந்நாட்டின் ஒன்பதாவது அதிபராக இன்று காலை பதவியேற்றுக் கொண்டார்.

பதவியேற்பு நிழ்ச்சி இலங்கை அதிபரின் செயலகததில் நடைபெற்றது.

55 வயதான திரு திசநாயகே நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கையில் தமக்கு அடுத்தபடியாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு சஜித் பிரேமதாசாவை தோற்கடித்தார்.

**[]<<<>>>[]**

பத்தாவது காமன்வெல்த் நாடாளுமன்ற கூட்டமைப்பின் இந்திய மண்டல உச்சிமாநாடு இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

மக்களவைத் தலைவரும், இந்திய மண்டலத்தின் தலைவருமான திரு ஓம். பிர்லா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் காமன்வெல்த் நாடுகளின் 46 அவைத்தலைவர்கள், துணைத்தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவை தலைவர், துணைத்தலைவர்கள் மற்றும் மாநில சட்டப்பேரவைகளின் தலைவர்கள், யூனியன் பிரதேசங்களின் அவைத்தலைவர்களும் இதில் பங்கேற்க உள்ளனர்.